பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 24 திங்கட்கிழமை 09.12.2024 கதிர் 032

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றபோது முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் ☞ 2

# யாரோடு யார் சேர்வது என்பதை வாக்குப் பலமே முடிவு செய்யும்

## ரெலோவுக்கு தமிழ் அரசுக் கட்சி பதிலடி

வாக்குப்பலத்தின் அடிப்படையிலேயே எந்தக்கட்சி யாருடன் இணையவேண்டும் என்பதுதீர்மானிக்கப்படும்என்றுஇலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின்மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்பேச்சாளருமான சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.அடுத்தவருடம்நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத்தேர்தலில்தமிழ்அரசுக் கட்சியோடு இணைந்து போட்டியிடுவதற்கு ரெலோவின் தலைமைக் குழு முடிவு செய்துள்ளநிலையில்தமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்றக்குழுப்பேச்சாளர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிஒற்றுமையை விரும்புகின்றது. கடந்த காலத்தில் நாம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மாத்திரம்தான் பிரிந்து செயற்படவேண்டும் என்றநிலைப்பாட்டினைக்கொண்டிருந்தோம். அதுவும் தொழில்நுட்ப அடிப்படையில்தான் அந்தத் தீர்மானத்தினை எடுத்திருந்தோம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் நாம் பிரிந்து செயற்படவேண்டும் என்று ☞ 2

## மக்கள் அச்சப்பட தேவையில்லை

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதில் ☞ 2

## அரிசி ஆலைகளில் சோதனை ஆரம்பம்

பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள அரிசி ஆலைகளில் முதல் சோதனை ☞ 2

## இறக்குமதியாகும் அரிசி அடுத்த வாரம் வந்துவிடும்

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடுத்த வாரம் நாட்டிற்கு வரும் என அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசியை இறக்குமதி செய்யுமாறு ஆளும்தரப்பு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைய, பல இறக்குமதியாளர்கள் ஏற்கனவே அரிசி இறக்குமதிக்கு முன்பதிவு செய்துள்ளனர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் ☞ 2

## அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

### விவசாய அமைச்சர் அறிவிப்பு

ஆளும்தரப்பு அறிவித்துள்ள அரிசி விலையைமீறுவோர்மீதுகடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரிசி இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளது. சதோசாவின் மூலமாக அரிசி விநியோகத்தினைச் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. அரிசி ஆலை உற்பத்தி யாளர்களும் ஜனாதிபதியின் நிர்ணய விலையில் அரிசியை ☞ 8



வழங்குவதற்கு இணங்கியுள்ளனர். ☞ 2

## உப்பு உற்பத்தி வீழ்ச்சி குறித்து ஆராயப்படும்

### வர்த்தக, வாணிப அமைச்சு அறிவிப்பு

இலங்கையில் உப்பு உற்பத்தி குறைவது குறித்து ஆராயவுள்ளதாக வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த வருடமும் இந்த வருடமும் உப்பு உற்பத்தி குறைந்துள்ளதாக உப்பு உற்பத்தி நிறுவனங்களின் அறிக்கை ஒன்று சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வருடமும் இந்த வருடமும் இந்த நாட்டில் உப்பு உற்பத்தி 40சதவீதத்தால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படிதற்போதுஉள்நாட்டில்உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும், இதற்கு தீர்வாக உப்பை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறும்உப்புநிறுவனங்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நாட்டில் உள்ள உப்பு இருப்பு மற்றும் நுகர்வுக்கு தேவையான அளவு ஆகியவற்றை ஆய்வு செய்த பின், இறக்குமதி குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 8

## அத்தியாவசிய மருந்துகளுக்கு 2025இல் தட்டுப்பாடு வரலாம்

### மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை

அடுத்த ஆண்டு நாட்டின் சுகாதார கட்டமைப்பில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான ☞ 8

## ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமையவே இனி அரிசி விலை

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட அறிவுத்தலுக்கு அமைவாகச் செயற்படவுள்ளனர் என்று அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரலிய அரிசி ஆலையின் உரிமையாளர்டட்லிசிறிசேனதெரிவிக்கையில், ஜனாதிபதி அநுரகுமார எம்மிடத்தில் நிர்ணய விலையில் அரிசியை விற்பனை செய்யுமாறு நட்பாகக் கோரியுள்ளார்.

அவருடைய கோரிக்கைக்கு அமைவாக அவர் அறிவித்த விலையில் நாம்அரிசியைவிநியோகிக்கவுள்ளோம். ஐந்து ரூபாயை மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் இலாபமாகப் பெறும் வகையில் அரிசி விலையை அவர் நிர்ணயித்துள்ளார் என்றார்.

## அமைச்சர்களின் பங்களாக்களை பெறுவதில் தனியார் கடும் ஆர்வம்

அமைச்சர்களின் பங்களாக்களைத் தமது பாவனைக்காக வழங்குமாறு சுமார் 15 தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஏழு வெவ்வேறு அமைப்புகள் அமைச்சர்களின் பங்களாக்களை வாடகைக்குக் கோரியுள்ளன. மேலும், அமைச்சர்களின் பங்களாக்களை தங்கள் பயன்பாட்டிற்கு தருமாறு ☞ 2

## அரச அதிகாரிகளின் மாபியாவே அரிசி விலையில் ஏமாற்றுகிறது

### கமநல ஒன்றியத் தலைவர் குற்றச்சாட்டு

அரசிக்கான விலையை நிர்ணயிப்பதிலும் அரிசி விலை உயராமல் கண்காணிப்பதிலும்அரசஅதிகாரிகளின் மாபியா குழு ஒன்றே ஏமாற்றி வருகின்றது என்று தேசிய கமநல ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமைபோன்றே அரச அதிகாரிகள் ஏமாற்றுகின்றார்கள். அரிசிப் பிரச்சினைக்குள் அதிகாரிகள் மாபியாவொன்று உள்ளது. குறிப்பாக வர்த்தக அமைச்சு,விவசாயஅமைச்சு,திறைசேரி மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்குள்தான் இந்த மாபியா உள்ளது.

அரிசி விநியோகத்திற்காக அரசி ஆலைகளை கண்காணிப்பதற்காக அதிகாரிகளை நியமிக்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால் அந்த அதிகாரிகளுக்கான சம்பளத்தை அரிசி ஆலை முதலாளிகளே வழங்குகின்றார்கள். இதில் பெரிய அரசி ஆலையாளர்கள் பின்னணியில் உள்ளனர்.

அதேபோன்று நுகர்வோர் அதிகார சபையைப் பற்றி அறியவும் அங்குள்ள அதிகாரிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் புலனாய்வுத்துறையொன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்;

# சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கிறது தேர்தல் ஆணைக்குழு

உள்ளூராட்சிசபைத்தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபருக்குக் கடிதம் அனுப்பவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிசபைத்தேர்தலை நடத்துவது தொடர்பான சட்டப் பின்னணி மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கான தகவல்களை அறிந்து கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எண்ணாயிரத்து 711வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, கடந்த ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டது.

எனினும்நிதிப்பற்றாக்குறையைக் காரணமாகக் காட்டி அப்போதைய நிதி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கான நிதியைஒதுக்கமறுத்தார். இதனால் தேர்தலை நடத்த முடியாமல் போனது.

இதற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம்தேர்தலுக்குநிதி ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சியுடன் ஒடிப்போய் ஒட்டிக்கொள்வது பற்றிப் பேசினார்கள். அதை அடுத்து தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கட்சியின் நிர்வாகச் செயலாளர் விந்தனின் பிரச்சினையை கையில் எடுத்தார்.

விந்தன் பொதுத் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து என்னைப் பற்றிப் பலதையும் சொல்லியுள்ளார். நான் பலரைக் கொலை செய்தேன் என்றும், போதைப் பொருள் கடத்தினேன் என்றும் போரில் ராணுவத்திற்கோ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கோ எதிராக ஒரேயொரு ரவைகூடச் சுடாதவர் என்றும் தெரிவித்திருக்கிறார். கட்சியின் பேச்சாளர் சுரேன் மீது கிரிமினல் வழக்கு இருக்கின்றது என்றும் அவர் ஒரு பின்கதவு அரசியல்வாதி என்றும் கூறியிருக்கின்றார். சுரேனுக்கு வாக்குப் போடவேண்டாம் என்றும் கேட்டிருக்கின்றார். இது தொடர்பில் கட்சி அவரிடம் விளக்கம் கேட்கவேண்டும். அதுவரையில் அவரை இடைநிறுத்தவேண்டும் என்றார்.

இடையில் குறுக்கிட்ட சுரேனும் சபா குதாஸும் விந்தனைக் கட்சியிலிருந்து நிரந்தரமாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் இந்திரகுமார் பிரசன்னா, துணைத் தலைவர் ஹென்றி மகேந்திரன், அம்பாறையைச் சேர்ந்த சிங்கன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தான் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் அடிப்படையில் தன் மீது நடவடிக்கை எடுக்கத் துடிக்கும் தலைவரும் அவரைச் சேரந்தவர்களும் தான் அப்படியொரு செய்தியாளர் சந்திப்பை நடத்தவேண்டி ஏற்பட்ட நிலமை குறித்து ஏன் எதற்கு என்று கேட்கமாட்டீர்களா என்று விந்தன் கேள்வி எழுப்பினார்.

திருகோணமலையில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட வேட்பாளர் நான்தான் என்று தீர்மானித்து அரங்கம் அதிரக் கைதட்டி வரவேற்று என்னை அனுப்பி வைத்த பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் தெரிவின்போது எனது பெயரை சுரேனும் சபா குகதாஸும் ஏன் தவிர்த்தார்கள்? யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சுரேன் கட்சி அப்படி ஒருபோது ஒரு முடிவும் எடுக்கவில்லை, விந்தன் அதற்குத் தகுதியான ஆள் இல்லை, என்று சொன்னாரே? அதெல்லாம் உங்கள் கண்ணுக்குத் தவறாகத் தெரியவில்லை நான் செய்தியாளர் சந்திப்பில் கூறியவைகள்தான் தவறாகத் தெரிகின்றனவா என்று விந்தன் எகிறினார். அவரது கருத்துக்களில் கோபமும் கொந்தளிப்பும் இருந்தாலும் வழக்கம்போலவே ஒரு பதற்றத்துடன் கூடிய நிதானமாக அழுத்தம் திருத்தத்துடன் கோர்வையாகப் பேசினார் அவர். தனது சொற்களுக்கு அழுத்தமும் வசனங்களுக்கு கனதியும் கொடுப்பதற்கு முயன்றார்.

ஆனால் தம்மை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கும் விதமாக அவரைக் கட்சியிலிருந்து தூக்குவது என்று முன்பே முடிவு செய்துவிட்ட கட்சி நிர்வாகிகள், அவரது கருத்துக்களைச் செவிமடுக்கும் பொறுமையோடு இல்லை. விந்தன் தனது கருத்துக்களைச் சொல்ல விடாமல் குறுக்கிட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த ஹென்றி மகேந்திரன் சுரேனைப் பார்த்து கட்சிப் பொதுக் குழுகூடி விந்தன்தான் வேட்பாளர் என்று முடிவெடுத்திருந்தபோதும் எப்படி சுரேனும் குகதாஸும் சேர்ந்து சசிகலாவை வேட்பாளராகக் கொண்டுவர முடியும்? என்று கத்தினார்.

அதற்கு வேட்பாளர் தெரிவுக்கு முன்னர் விந்தனுக்குப் 10 தரம் அலைபேசி அழைப்பெடுத்தோம், அவர் பதிலளிக்கவில்லை, அதனால்தான் அவரை வேட்பாளராகச் சேர்க்கவில்லை என்று சுரேன் பதிலளித்தார். உடனே ஹென்றி சுரேனைப் பார்த்து, செய்தியாளர் சந்திப்பில் விந்தனைக் கட்சி ஒருபோது வேட்பாளராகத் தெரிவு செய்யவில்லை என்றும் அவருக்கு அந்தத் தகுதி இல்லை என்றும் விந்தன் மீது வழக்குப் போட்டி-ருக்கின்றேன் என்றும் கூறிவிட்டு இங்கு வந்து என்ன மாற்றி மாற்றிக் கதைக்கிறீர்கள் என்று சீறினார்.

குறுக்கிட்ட விந்தன் தனக்கு ஒருபோதும் சுரேன் அழைப்பெடுக்கவில்லை, மிஸ்ட் கோலும்கூ-ட இல்லை என்றும், அப்படி அழைப்பெடுத்ததை அவர் தனது அலைபேசி இணைப்பு வழங்கும் நிறுவனத்தில் இருந்து நிரூபித்தால் கட்சியை விட்டு நானே விலகுவேன் என்றும் தெரிவித்தார். அப்படி இல்லை என்றால் தனது அலைபேசி நிறுவனத்தின் மூலம் சுரேன் தனக்கு அழைப்பெடுக்கவில்லை என்று நிரூபிக்கத் தான் தயார் என்றும் தெரிவித்தார்.

வினோவும் இதே விடயத்தில் கேள்வி எழுப்பினார். முன்னுப் பின் முரணாகப் பேசி யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என்று சுரேனைக் கடிந்துகொண்டார்.

பிரச்சினை தமது தரப்புக்கு எதிராகத் திரும்புவதைப் பார்த்த தலைவர், விந்தனுக்கு எதிராக நானும் வழக்குப் போடுவேன் என்று உடனே விடயத்தைத் திசை திருப்பினார். ஏற்கனவே உச்சத்தில் இருந்த விந்தன் இதைக் கேட்டதும் இன்னும் கோபத்தின் எல்லைக்குச் சென்றார், தலைவரை நேருக்கு நேர் எதிர்த்தார். போய் வழகுப் போடுங்கோ, உட்கட்சிக்குள் யார் யாரைப் படுகொலை செய்தீர்கள் என்பதற்கு சென்னையில இருந்தபடி நீங்கள் உட்கட்சிக் கொலைகளுக்கு யார் யாரை எல்லாம் தூண்டிவிட்டீர்கள் என்பதற்கும் போதைப் பொருள் கடத்தினீர்கள் என்பதற்கும் யார் யாரையெல்லாம் கடத்தினீர்கள் என்பதற்கும் என்னிடம் ஆதாரங்கள் உண்டு, அவற்றையெல்லாம் நானும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன் என்றார் நெத்தியடியாக.

ஆடிப்போன தலைவரும் பொருளாளரும் என்ன ஆதாரம் இங்கேயே செல்லு பார்க்கலாம் என்றார்கள். சுதாகரித்துக்கொண்ட விந்தன், நீங்கள்தான் வழக்குப் போடப் போகின்றேன் என்கிறீர்களே, அவர் ஒருத்தர் வழக்குப் போட்டிருக்கின்றேன் என்கிறார் பின்னர் அந்த ஆதாரங்கள் எல்லாவற்றையும் எப்படி உங்களுக்கு முன் இங்கு சமர்ப்பிப்பது, வழக்குகள் என்னைத் தேடி வரும்போது நான் எல்லாவற்றையும் நீதிமன்றத்திலேயே சமர்ப்பித்துக்கொள்கின்றேன் என்றார்.

இல்லை எங்களுக்கு முதலில் விளக்கம் தா பிறகு நீதிமன்றத்துக்குப் போகலாம் என்றனர். ஆனால், சுரேன் ஏற்கனவே வழக்குப் போட்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். உங்கள் இரண்டுபேர் குறித்தும் நான் கூறியதற்காகத்தானே அவர் வழக்குப் போட்டிருப்பார், இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கு அந்த வழக்கு என்னிடம் வந்து சேரும்தானே! அதற்கு முன்னர் உங்களிடம் எப்படி ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்று விந்தனும் வாதாடினார்.

இந்த மோதல் நீண்ட செல்வே, சரி இது விடயத்தில் நீங்கள் வழக்குக்குச் செல்லுங்கள், விந்தன் ஆதாரங்கள் இருந்தால் சமர்ப்பிக்கட்டும் என்று கூறி மற்றவர்கள் அதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்கள்.

விந்தன் அத்தோடு நிறுத்தவிலலை. இந்தக் கூட்டத்தில் கட்சி தொடர்பில் விவாதிக்கப்படவேண்டிய சில விடயங்கள் தனக்கும் இருக்கின்றன, அவற்றையும் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறித் தொடங்கினார்.

தலைவரைப் பார்த்து, ஜனாதிபதித் தேர்தலுக்காக 'லைக்கா' 3 கோடி ரூபாய் தந்தது என்று திருகோணமலையில் வைத்து நீங்கள் கூறினீர்கள், அதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். பொதுத் தேர்தலில் லைக்காவிடமிருந்து ரெலோ எவ்வளவு காசு வாங்கியது, அதனுடைய வரவு செலவுக் கணக்கு என்ன? வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் ரெலோவின் பல முக்கியஸ்தர்கள் இருக்கின்றபோதும் உங்களுக்காக ரணில் ஒதுக்கிய நிதியில் சுரேனுக்கு மட்டும் யாழ்ப்பாணத்தில் 20 மில்லியனில் நீங்கள் கொடுத்துப் பாரபட்சம் காட்டியதற்குக் காரணம் என்ன? கட்சியின் 11ஆவது தேசிய மாநாட்டிற்கான கணக்கறிக்கையும் கடந்த பொதுத் தேர்தலுக்கான கணக்கறிக்கையும் கட்சியில் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை, அது ஏன்? ரணிலால் தேர்தல் லஞ்சமாக வழங்கப்பட்ட 'பார் பெர்மிட்' வடக்கு கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் அந்த 'பார்' அனுமதிப்பத்திரம் பெறப்பட்டது என்று சொல்லப்படுகின்றது. ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த நீங்கள் யாராவதும் அப்படி 'பார் லைசென்ஸ்' பெற்றீர்களா? என்கிற நான்கு கேள்விகளையும் எழுப்பினார். செயலாளர் அந்தக் கேள்விகளைக் குறித்துக்கொண்டார்.

விடயங்கள் தமக்கு எதிராகத் திரும்புவதை உணர்ந்ததும் குறுக்கிட்ட சபா குகதாஸ், ஜனாதிபதித் தேர்தலில் வினோ கட்சியின் முடிவுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தவர் அவரிடம் விளக்கம் கோரி நடவடிக்கை எடுப்பதாக தலைமைக் குழுவின் மூன்று 'சூம்' கூட்டங்களில் பேசப்பட்டது, ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அவர் மீது என்ன ஒழுக்காற்று நடவடிக்கை என்றார். உடனே குறுக்கிட்ட வினோ, நான் முதலில் இருந்து முழுவதுமாக என்ன நடந்தது என்று அத்தனையும் சொல்லுவேன், ஆனால் அந்த விவரங்கள் எல்லாம் பத்திரிகைக்குப் போகக்கூடாது என்ற உத்தரவாதத்தை நீங்கள் எல்லோரும் தரவேண்டும் என்றார். எல்லா 'டீல்' குறித்தும் விலாவாரியாகச் சொல்லத் தயார் என்றார்.

உடனே, இல்லை இங்கு சொல்ல வேண்டாம், சொன்னால் அது அடுத்த நிமிடம் பேஜ் தமிழ் தளத்திற்குப் போகும் அல்லது காலைக்கதிர் பத்திரிகைக்குப் போகும், இங்கே இருக்கிறார் ரிப்போர்ட்டர் விந்தன் என்று ஜனா பதிலளித்தார். அந்தப் பதிலோடு வினோவிடம் இருந்து அவர் ரணிலை ஆதரித்தது தொடர்பாகவும் பொதுத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இருந்து விந்தனின் பெயரை நீக்கியது தொடர்பில் சுரேனும் குகதாஸும் விளக்கமளிக்கவேண்டும் விந்தனை இடைநிறுத்துவதுதான் தலைமைக் குழு தீர்மானம் என்றார்கள்.

கையோடு விந்தனை கட்சியிலிருந்து 3 வாரங்களுக்கு இடைநிறுத்துவதாகவும் அதற்கிடையில் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கவேண்டும் என்றும் அப்படிப் பதிலளிக்கவில்லை என்றால் பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்ததாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எழுதி ஒரு கடிதத்தை விந்தனிடம் நீட்டினார் ஜனா.

இதற்கும் மேலும் பல விடயங்ள் அங்கு நடந்தன. இந்தப் பத்தி இன்று நீண்டு விட்டதால் மற்றவற்றை இன்னொரு நாள் சொல்கின்றேன்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## யாரோடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதியிருக்கவில்லை. ஆனால் பங்காளிக்கட்சியாக இருந்தவர்கள் அவசரப்பட;டுச் சென்று ஜனநயாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியை உருவாக்கியிருந்தார்கள்.

பின்னர் அவர்கள் தாங்கள் ஐந்து தரப்பினர் ஒன்றாக இருக்கின்றோம். தனிக்கட்சியாகவுள்ள தமிழ் அரசுக் கட்சியே தம்முடன் இணைந்துகொள்ளவேண்டும் என்று நிபந்தனையை விதித்தார்கள்.

குறிப்பாகத் தனியாகவுள்ள கட்சியானது ஐந்து கட்சிகளைக் கொண்ட கூட்டில் இணைவதுதான் சரியானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் செயற்பட முடியாது என்றும் கருத்து வெளியிட்டார்கள்.

தேர்தல் நிறைவின் பின்னர் பார்க்கின்றபோது அந்தத் தரப்பினரால் ஒரு ஆசனத்தினையே கைப்பற்ற முடிந்துள்ளது. ஆகவே அவர்கள் தற்போது நிலைமையைப் புரிந்துகொண்டிருப்பார்கள். எனவே எதிர்காலத்தில் அவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக தீர்மானங்களை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்.

தனியொரு கட்சியாக இருந்தாலும் சரி ஐந்து கட்சிகளாக இருந்தாலும் சரி வாக்குப்பலத்தின் அடிப்படையில்தான் கூட்டிணைவு தீர்மானிக்கப்படும் என்பதை அந்தத் தரப்பினர் புரிந்து ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகின்றேன் - என்றார்.

## அரிசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரிசி ஆலைகளிலிருந்து நாளாந்தம் விநியோகிக்கப்படும் அரிசி தொகை தொடர்பில் அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முதல் 10 நாட்களுக்கு தொடர்ச்சியாக அரிசி ஆலைகளில் சோதனைகள் நடத்தப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள பிரதான 8 அரிசி ஆலைகளில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனடிப்படையில், அரலிய, நியூரத்ன, நிபுன, லக் சஹல், மேனக, ஹிரு, ஜயவிக்ரம மற்றும் வீஹேன ஆகிய அரிசி ஆலைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள இரேஷா, லயனல், நூர்பு, நவோத்யா, சனுஜா ஆகிய 5 அரிசி ஆலைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

நெல் கொள்வனவு நாளாந்த உற்பத்தி மற்றும் அரிசி தொகை விநியோகம் உள்ளிட்டவை தொடர்பில் தரவுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இதன்போது முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலையில் 230 ரூபா சில்லறை விலையிலும் விற்பனை செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அரிசி ஆலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்தமை குறிப்படத்தக்கது.

## அமைச்சரிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நீதிபதிகளும் கோரிக்கைவிடுத்துள்ளனா் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனிடையே, சுற்றுலாத்துறையை மேம்படுத்த அமைச்சர் பங்களாக்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என அமைச்சின் சில அதிகாரிகள் அரசுக்கு பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சம் கொள்ளத் தேவையில்லை என மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுகளில் தகவல்கள் வழங்கப்படுவதில்லை என்ற செய்திகள் வெளியாகியுள்ளதாக குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்தார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் டிசெம்பர் 23 நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த வருடத்திற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இறக்குமதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து குறித்த அரிசி தொகை முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த வாரத்திற்குள் அது நாட்டிற்குக் கிடைக்கும்.

நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இறக்குமதியாளர்களுக்கு நேரடியாக அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க அமைச்சரவை அண்மையில் தீர்மானித்திருந்தது.

அதன்படி அரிசி மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி திருத்தம் செய்யப்பட்டு, டிசெம்பர் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு வெளியிட்டது.

இதேவேளை, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் உத்தரவுக்கமைய, கட்டுப்பாட்டு விலையின் கீழ் அரிசி தொகைகள் கடைகளுக்கு விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் நேற்றுக் காலை முதல் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் அரிசி நெருக்கடி தொடர்பில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில், அரிசிக்கான புதிய கட்டுப்பாட்டு விலையை விதிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன்படி நேற்று முதல் அரிசி கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை விடுத்திருந்தார்.

# இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் தொடர் கரிசனையுடன் செயலாற்றிவருகிறோம்

## பிரிட்டன் அரசு தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில்பொறுப்புக்கூறலைஉறுதிசெய்வதையும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதையும் முன்னிறுத்தி பிரிட்டன் தொடர்ந்தும் கரிசனையுடன் செயலாற்றிவருவதாகத் தெரிவித்திருக்கும் அந்நாட்டு இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் கத்ரின் வெஸ்ட், எதிர்வருங்காலத்தில் தடை விதிக்கப்படக்கூடிய பதவிகள் குறித்த யூகங்களை வெளியிடுவதானது, அத்தடைகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்துவிடும் என சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பிரிட்டன் பொதுத்தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றியை அடுத்து, புதிய பிரதமராகத் தெரிவான கெய்ர் ஸ்டார்மருக்கு வாழ்த்துத்தெரிவித்து பிரித்தானிய தமிழர் பேரவை கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தது. அக்கடிதத்தில், 'எதிர்வரும் செப்ரெம்பர்மாத (நடைபெற்றுமுடிந்த) ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான முன்னைய தீர்மானம் மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கப்படுவதைத் தடுப்பதற்கும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையை நோக்கி நகர்த்திச்செல்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளைபிரிட்டன்முன்னெடுக்கவேண்டும்' என வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி, 'இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பிரிட்டனில் நடைமுறையில் உள்ள உலகளாவிய மனித உரிமைகள்சார் தடைகள் சட்டம் போன்ற சகல விதமான தடைகளையும் விதிப்பதற்குப் பின்நிற்கக்கூடாது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் சொத்து மற்றும் பயணத்தடைகளை விதித்துள்ளன. எனவே உலகளாவிய மனித உரிமைகள் கட்டப்பாட்டுக்கு அமைவாக அமெரிக்கா மற்றும் கனடாவைப் பின்பற்றி பிரிட்டனும் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதிக்க முன்வரவேண்டும்'என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

அக்கடிதத்துக்குப் பதிலளித்து பிரிட்டனின் இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் கத்ரின் வெஸ்ட் கடந்த 4 ஆம் திகதி பிரித்தானிய தமிழர் பேரவைக்கு பதில் கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது -

இலங்கை தொடர்பில் நீங்கள் கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு இந்தோ - பசுபிக் விவகார அமைச்சர் என்ற ரீதியில் பதிலளிக்கிறேன்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாகமனிதஉரிமைகளுடன்தொடர்புடைய பரந்துபட்ட கரிசனைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பிரிட்டன் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட்டுவருகிறது. செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் வெளியிட்ட அறிக்கையிலும் எமது கரிசனைகள் குறித்து தெளிவாக வெளிப்படுத்தியிருந்தோம்.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தமட்டில் பிரிட்டன் அரசாங்கமானது ஏனைய இணையனுசரணை நாடுகளுடன் இணைந்து இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் கடந்த பல வருடகாலமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக சர்வதேச மட்டத்தில் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. கடந்த ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி பிரிட்டனின் தலைமையில் கொண்டுவரப்பட்ட 57ஃ1 தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேசத்தின் பங்கேற்புடனான நிகழ்ச்சித்திட்டமொன்று தொடர்வதற்கு இத்தீர்மானம் வழிகோலியிருக்கிறது. மிகமுக்கியமாக இத்தீர்மானமானது இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கும், அவற்றைப் பேணுவதற்கும் அளிக்கப்பட்டிருந்த ஆணையைப் புதுப்பித்திருக்கிறது.


மேலும் தடைகளை விதிப்பது என்பது மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்கான ஏனைய பல இராஜதந்திர உத்திகளில் ஒன்றாகும். எதிர்வருங்காலத்தில் தடை விதிக்கப்படக்கூடிய பதவிகள் குறித்த யூகங்களை வெளியிடுவதானது, அத்தடைகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைக்கும் என்பதால், அவ்விவரங்களை வெளியிடுவது பொருத்தமானதாக அமையாது என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கல்முனை கடற்கரை பள்ளியின் 203 ஆவது கொடியேற்ற நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வரும் ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்காவில் 203 ஆவது கொடியேற்று விழா திங்கட்கிழமை ஆரம்பமானது.

உலமாக்கள், பக்கீர் ஜமா அத்தினர், நிர்வாகிகள், ஊர் மக்கள் புடைசூழ கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இருந்து புனித கொடியானது தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்கா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது.



கொடி ஏற்றிய தினமான இன்றில் இருந்து தொடர்ந்து 12 நாள்களுக்கும் பாதுஷா ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல்லாஹூ ஸிர்ரஹூல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித ரிபாஈ ராதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடியிறக்கு தினமான எதிர்வரும் டிசெம்பர் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள், உலமாக்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அம்பாறை மாவட்ட கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் வலுவான தடுப்பமைக்க நடவடிக்கை

## வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கோரிக்கை



அம்பாறை மாவட்டம் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் அடிக்கடி நடைபெறும் உயிரிழப்புக்களையும், விபத்துக்க ளையும் கட்டுப்படுத்த குறித்தபிரதேசங்களில்வீதிப்பாதுகாப்பு தடுப்புக்களை ஏற்படுத் துவதுடன் அகலமாக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு கேட்டு ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாவடிப்பள்ளி, கிட்டங்கி ஆகிய இரு இடங்களில் மாவடிப்பள்ளியில் 6 சிறுவர்கள் மற்றும் 2 பெரியவர்கள் மற்றும் அம்பாறை மாவட்டம் கிட்டங்கியில் ஒருவர் உட்பட 9 பேர் உயிரிழந்தமை வருத்தமளிக்கும் ஒன்றாகும். இது போன்று அடிக்கடி குறித்த பிரதேசங்களில் உயிரிழப்புக்கள் நடைபெறுவது வழமையாகி வருகிறது. முக்கியமாக குறித்த இந்த இரண்டு இடங்களின் பாலங்கள் எதிர்காலத்தில் விபத்துக்களையும், மரணத்தைத் தவிர்க்கும் விதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம் பெறுகிறது என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், ஒவ்வொரு இடத்தின் இருபுறமும் பாலத்தில் இருந்து சாலை வரை 500 மீற்றர் தூரத்திற்கு வலுவான தடுப்புகள் அமைப்பதுடன், வெள்ள அளவைக் குறிப்பதுடன், எதிர்காலத்தில் இப்பகுதி மற்றும் பிற பகுதிகளின் பயணிகளின் இத்தகைய மரணங்கள் கடுமையாகத் தவிர்க்கப்படும். தென்கிழக்கு பிராந்திய கடலோரப் பகுதியை முழு அம்பாறை மாவட்டம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளுடன் இந்த சாலைகள் இணைக்கும் என்பதால், ஒவ்வொரு ஆண்டும் பருவகால வெள்ளம் காரணமாக, இந்த இடங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது இரண்டு இடங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமான மரணத்துடன் நடைபெறுகின்றன.

எனவே, உங்கள் தொழிநுட்ப பிரிவை கொண்டு இப்பகுதியின் செயற்பாட்டு சூழலை ஆய்வு செய்து, இரண்டு பாலங்களுக்கும் மிகவும் வலுவான தடுப்புகளை அமைக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம், இப்படி பாதுகாப்பை வழங்கும் போது நீர் வடிந்தோட இடையூறு இல்லாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் இப்பகுதி பயணிகளின் விபத்து மற்றும் மரணத்தைத் தவிர்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பயணிகளின் நன்மை கருதியும், யானைத் தொல்லைகளை கவனத்தில் கொண்டும் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் நிர்வாகிகள் பலரும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அம்பாறை - காரைதீவு வீதியில் காரைதீவு, மாவடிப்பள்ளி பிரதேசத்தில் பிரமாண்ட ஒளியூட்டும் மின் விளக்குகள் பொறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரிசி அரசியல்

இலங்கையில் பல நூற்றாண்டுகளாக அரிசிதான் பிரதான உணவு. பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான சில ஆண்டுகள் அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவை அடைந்துள்ளதாகவும் அரிசியை ஏற்றுமதி செய்வதாகவும் அறிவிக்கப்பட்டது. எனினும் அரிசியின் போதுமான மற்றும் பயனுள்ள உற்பத்தி, சேமிப்பு மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்த முடியாத நிலையிலேயே இலங்கை திணறுகின்றது என்பதை தற்போதைய அரிசி நெருக்கடி தெளிவாகக் காட்டுகின்றது.

அரிசி உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான முறையான பொறிமுறையை நிறுவுவதற்கு இலங்கை இன்னும் போராடி வருகின்றமை கண்கூடு. அடிக்கடி ஏற்படும் அரிசித் தட்டுப்பாட்டைப் போக்க அடுத்தடுத்த ஆளும்தரப்புக்கள் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவை நிரந்தரமான தீர்வுகளாக இல்லை என்பதையே இன்றைய நிலை காட்டுகின்றது. அரிசிப் பற்றாக்குறையை சமாளிக்க நாடு மீண்டும் போராடி வருகிறது.

இம்முறை, அதிகாரத்தில் உள்ள புதிய ஆளும்தரப்பிடம் இருந்தாவது இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான உறுதியான தீர்வு ஒன்று கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், 1953ஆம் ஆண்டு அரிசிக்காக மக்கள் நடத்திய கடையடைப்புப் போராட்டம் போன்ற நிலை ஏற்படக்கூடும் என்கிற வகையில் வெளிவரும் எதிர்வுகூறல்கள் மனக்கிலேசத்தை ஏற்படுத்துகின்றன.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மற்றும் அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பினரால் வழங்கப்பட்ட முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் இலங்கையின் அரிசிப் பிரச்சினைக்கான தீர்வும் ஒன்றாகும், நெல் மற்றும் அரிசி பதுக்கல்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதை உள்ளடக்கிய உடனடி தீர்வுகள் காணப்படும் என்று அவர்கள் உறுதியளித்திருந்தனர்.

இந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றினார்களா என்பது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் தற்போது கேட்கும் கேள்வி. தேசிய மக்கள் சக்தி இப்போதுதான் ஆட்சியின் யதார்த்தங்களை கற்றுக்கொண்டிருப்பதாகவும், எதிர்க்கட்சியில் இருந்தபோது வாக்குறுதியளிக்கப்பட்ட 'கடுமையான நடவடிக்கைகள்' அரசமைப்பின் நீதித்துறை கட்டமைப்பிற்குள் அவ்வளவு இலகுவானவை அல்ல என்பதை அவர்கள் இப்போது புரிந்துகொண்டிருப்பார்கள் என்றும் எதிர்க் கட்சிகள் கூறுகின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தினூடாக அதிக இலாபம் ஈட்டுவதற்காக இலங்கையில் அரிசி பதுக்கப்படுவதாக நீண்டகாலமாகவே குற்றச்சாட்டு உண்டு. அதிகார சக்தி மிக்க பெரும் அரிசி ஆலை முதலாளிகளே இவ்வாறு பெருமளவு பணத்தை வாரி இறைத்து நெல்லைக் கொள்வனவு செய்த பின்னர் அதனை சந்தைத் தேவைக்கேற்ப வெளியில் விடாமல் பதுக்கு வைத்து விலையை ஏற்றுகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியினரே கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால் இப்போது அவர்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை.

பெரிய அரிசி ஆலைகளின் உரிமையாளர்களைக் கடந்த வாரம் அரசுத் தலைவர் சந்தித்தார். சந்தையில் தாராளமாக அரிசி இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் நியாயமான விலையில் அரிசி விற்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கு ஒத்துழைக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அந்தச் சந்திப்பில் எச்சரித்தார். அதன் விளைவுகளை உடனடியாகச் சந்தையில் காணவில்லை. அரசுத் தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றுவோம் என்று அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இருந்தாலும் இந்தப் பழமுறையின் வெற்றி எவ்வளவுதூரம் சாத்தியம் என்பது இன்னும் தெரியவில்லை.

அரிசி உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்தும் பல்வேறு வழிமுறைகள் இருந்தும், நாட்டில் உற்பத்தியாகும் அரிசி உபரியாக இருந்தும் சந்தையில் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்பதும் குழப்பங்களை மேலும் அதிகரித்து நீடிக்கவே வழிவகுக்கின்றது. வெறும் அறிவுறுத்தல்கள், எச்சரிக்கைகள் அல்லது சட்ட நடவடிக்கைகளால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வாய்ப்பில்லை என்பது கடந்த காலங்களிலேயே கண்டறியப்பட்ட ஒன்று. இந்தப் பிரச்சினைக்கு, நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல் ஏன் சந்தைக்கு போதியளவு அரிசியாக மாற்றப்படுவதில்லை என்பதைக் கண்டறிவதில் தொடங்கும் முழுமையான அணுகுமுறையும் பொறிமுறையும் தேவை.

ஆளும்தரப்பு வெறுமனே அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளை வழங்குவதற்கு அப்பால் செல்லவேண்டும். நிரந்தரத் தீர்வுக்கான வழிகளை ஆராய வேண்டும். அரிசி ஆலைகளை முதலில் 'மாபியா' என்றார்கள். இப்போது அரசு அதிகாரிகள் அரிசி 'மாபியா' என்கிறார்கள். ஒட்டுமொத்தத்தில் புற்றுநோய் போல் அனைத்துப் பக்கங்களிலும் தவறுகள் புரையோடிப்போய் இருக்கின்றன என்பது புரிகிறது. அதனைச் சரிசெய்யவேண்டும், அதுவும் இதுபோன்ற விடயங்களில் மிக விரைவான தீர்வுகளும் வரவேண்டும் என்பது கடும் சவால்தான் என்கிறபோதும் ஆளும்தரப்பு அதனை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். அரிசியை முன்வைத்து இலங்கையில் மற்றொ-ரு கலவரம் வெடிப்பதற்கு முன்பாக ஆளும்தரப்பு இதற்கொரு தீர்வைக் கண்டுபிடிக்கவேண்டும்.

## தென்கொரியா: ஆட்சியை நீடிக்க ஓர் உள்ளக சதியா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



தென் கொரியாவில் அவசர அவசரமாக இராணுவ சட்டத்தை (Martial Law ) அமுலுக்கு கொண்டுவந்ததாக ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த வாரம் அறிவித்தார்.

சியோலில் அவசர காலத்தில், நெருக்கடிகளைச் சமாளிக்க உருவாக்கப்பட்ட ராணுவ ஆட்சி, தற்போது கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும், அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கும், ஜனநாயகத்திற்கு தீங்கு விளைவிப்பதற்கும் ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுவதாக அடிக்கடி விமர்சிக்கப்படுகிறது.

வட கொரிய கிளர்ச்சியை முறியடிக்கவே, கம்யூனிச சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுத்ததாகக் கூறி அவசர நிலையை அவர் முதலில் பிரகடனம் செய்தார்.

வட கொரிய சர்வாதிகாரி கிம் ஜங் உன்னை ஆதரிக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களின்



அச்சுறுத்தலை இராணுவச் சட்டம் முறியடிக்கும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் வடகொரியாவின் கிம் ஜோங் உன்னால் ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படும் கிளர்ச்சியை முறியடிக்கவே இந்த நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றும் வகையில் முயற்சி மேற்கொண்ட இராணுவத்தின் நடவடிக்கையை திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தடுத்தனர்.

**ஒன்றிணைந்த எதிர்க்கட்சி பலம்:**

உடனடியாக சபாநாயகர் வூ வோன்-சிக் இராணுவச் சட்டத்தை நீக்கக் கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 300 பேரில் 190 பேர் கலந்து கொண்ட நிலையில் அவரது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் போது கலந்து கொண்டவர்கள் அனைவரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதனையடுத்து ஜனாதிபதி யூனின் ஆட்சி முடிவடையும் நிலையை தற்போது எட்டியுள்ளது.

ஆனால் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவசரநிலை பிரகடன நடவடிக்கையை தடுப்பதாக உறுதியளித்தனர். மேலும், இராணுவச் சட்டத்தை அறிவிக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கையைத் தடுக்க அந்நாட்டு நாடாளுமன்றம் வாக்களித்தது.

தென் கொரியாவின் வலதுசாரி ஜனாதிபதி எதிர்பாராத விதமாக இராணுவச் சட்டத்தை அறிவித்த பின்னர், தற்போது எதிர்க்கட்சிகளின் கடும் அழுத்தம் காரணமாக பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**வட கொரிய ஆதரவாளர்களால்**




1980 களில் இருந்து நாடு சந்தித்த மிகவும் கடுமையான சவால் இதுவென்றே கூறப்படுகிறது. எதிர்க்கட்சிகளுடனான கடும் மோதலுக்கு மத்தியில் ஜனாதிபதி யூன் சுக் யோல் இராணுவச் சட்டத்தை அறிவித்து பின் வாங்கினார்.

மட்டுமின்றி, வட கொரிய சார்பு ஆதரவாளர்கள் மற்றும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களால் ஏற்பட்ட நெருக்கடி இதுவென்றும் அவர் அப்பட்டமாக குற்றம் சாட்டினார்.

**அமெரிக்க ராணுவ தளம்:**

வடகொரியாவுக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளில் 28,500 அமெரிக்க ராணுவ வீரர்கள் தென் கொரியாவில் முகாமிட்டுள்ள நிலையிலேயே நாட்டின் நெருக்கடி குறித்து கூர்ந்து கவனித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி யூனின் அறிவிப்பைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், நாடாளுமன்ற இராணுவச் சட்டத்தை நிராகரித்துள்ளதாக வெளியான தகவல் கூடியிருந்த மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தியது.

பொதுவாக ஜனாதிபதி யூன் தனது அரசியல் எதிரிகளை அரசுக்கு எதிரான சக்திகள் மற்றும் போலி செய்திகள் என்று முத்திரை குத்துவதில் பெயர் பெற்றவர்.

மே 2022ல் பொறுப்பேற்ற அவரது நிர்வாகம், பத்திரிகைகளுக்கு எதிராக அவதூறு வழக்குகளைப் பயன்படுத்துவதை பெருமளவில் முடுக்கிவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**வட கொரியாவின் நிலைப்பாடு என்ன ?**

சியோல் அரசால் அவசரநிலை பிரகடன நடவடிக்கை குறித்து வட கொரிய அரசிடமிருந்து எந்த தகவலும் இல்லை. யூன் தனது பிரகடனத்தில், வட கொரியாவை குறிவைத்து, வட கொரிய கம்யூனிஸ்ட் சக்திகளின் அச்சுறுத்தலில் இருந்து சுதந்திர கொரிய குடியரசைப் பாதுகாப்பது, எங்கள் மக்களின், சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் சூறையாடும் வெறுக்கத்தக்க வட கொரிய சார்பு அரசு எதிர்ப்பு சக்திகளை ஒழிப்பது என்றும் யூன் கூறினார்.

இது போன்ற கருத்துக்கள் பொதுவாக வட கொரியாவில் இருந்து எதிர்வினையை வெளிப்படுத்தும். ஆனால் இம்முறை நாட்டின் அரசு ஊடகங்களில் இருந்து எந்த பதிலும் இல்லை.

அதிபர் யூனின் ராணுவச் சட்ட ஒழுங்கு நடவடிக்கை கலைக்கப்பட்டதாகவும், வட கொரியாவிடமிருந்து அசாதாரண நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றும் தென் ராணுவ தலைமை அதிகாரி கூறினார்.

வட கொரியாவிற்கு எதிரான தென் கொரியாவின் பாதுகாப்பு நிலைப்பாடு உறுதியாக உள்ளது என்று கொரிய யோன்ஹாப் செய்தி நிறுவனம் கூறியது.

வட கொரிய அச்சுறுத்தல்களை யூன் ஏன் குறிப்பிட்டார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால், வட மற்றும் தென் கொரியாவுக்கு இடையே ஏற்கனவே அதிகரித்து வரும் பதட்டங்களை இது பெரிய அளவில் பாதிக்காது என்றும் பலர் நம்புகின்றனர்.

**தென் கொரியாவில் ராணுவச் சட்ட வரலாறு:**

45 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக ராணுவ ஆட்சியை தென் கொரியாவில் அறிவித்து, நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

1948 இல், அதிபர் சிங்மேன் ரீ, ஜெஜு எழுச்சியை அடக்குவதை எதிர்க்கும் ஒரு கலகத்தைக் கட்டுப்படுத்த ராணுவச் சட்டத்தை அறிவித்தார். இதன் விளைவாக பொதுமக்கள் ஏராளமானோர் உயிரிழந்தனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கொரியா; ஆட்சியை நீடிக்க ஓர் உள்ளக சதியா?

4ம் பக்கத் தொடர்ச்சி..........

கடந்த 1960 இல், ஏப்ரல் புரட்சியின் போது ராணுவச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. தேர்தல் மோசடிக்கு எதிரான பேரணியின் போது உயர்நிலைப் பள்ளி மாணவர் ஒருவர் காவல்துறையினரால் கொல்லப்பட்டதையடுத்து, ரீ நிர்வாகத்திற்கு எதிரான போராட்டங்கள் பல அதிகரித்தன.

அதிபர் பார்க் சுங்ஹீ தனது ஆட்சிக்கு எதிராக உள்ள அச்சுறுத்தல்களை அடக்குவதற்கு அடிக்கடி ராணுவ ஆட்சியை அறிவித்தார். 1980 ஆம் ஆண்டில், தென் கொரியாவின் அதிபர் பார்க் சுங்-ஹீ படுகொலை செய்யப்பட்ட பின்னர், புதிய தலைவரான சுன் டு-ஹ்வான், நாட்டைக் கட்டுப்படுத்த ராணுவச் சட்டத்தை அறிவித்தார்.

இந்த நேரத்தில், குவாங்ஜு நகரில் மக்கள் அவரது அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். ராணுவம் எதிர்ப்பாளர்களைத் தாக்கி, அவர்களில் பலரைக் கொன்றது குவாங்ஜு படுகொலை என்று அறியப்பட்டது.

ராணுவச் சட்டத்தை பொதுப் பாதுகாப்புக்கான நடவடிக்கையாக இல்லாமல், அரசியல் அதிகாரத் திற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதாக இந்நிகழ்வுடன் தொடர்புப் படுத்தப்பட்டது.

1987 முதல், தென் கொரியாவின் அரசியலமைப்பு ராணுவச் சட்டத்தை அறிவிப்பதற்கான நிபந்தனைகளை கடுமையாக்கியுள்ளது. ராணுவ சட்டத்தை நீட்டிப்பு செய்ய அல்லது நீக்கத்திற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை.

**தென்கொரியஜனாதிபதிபடுகொலைசெய்யப்படலாம்?**

இராணுவச் சட்டத்தை அறிவித்து, அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ள ஜனாதிபதி யூன் பதவி நீக்கத்தை எதிர்கொள்ள இருக்கிறார். இதற்கு முன்னரும் பல தலைவர்கள், நாட்டில் அரசியல் நெருக்கடியை உருவாக்கி, பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது சிறை தண்டனையை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் சிலர் படுகொலையும் செய்யப் பட்டுள்ளனர்.

தென் கொரியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக பொறுப்பேற்றவர் ஊணழிஷவ றூளற்ஐ-ஜுதீள. இவர் கடந்த 2016ல் நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் சிறை தண்டனைக்கு விதிக்கப்பட்டார்.



**கொடூரமான ஜனாதிபதி:**

2003 முதல் 2008 வரையில் தென் கொரிய ஜனாதிபதியாக இருந்தவர் Roh Moo-hyun. சுமார் 6 மில்லியன் டொலர் லஞ்சம் வாங்கியதாக விசாரணையை எதிர்கொள்ளும் நிலையில், 2009 மே மாதம் ஒரு குன்றிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

தென் கொரியாவின் மிகவும் கொடூரமான ஜனாதிபதியாக அறியப்பட்டவர் Chun Doo-hwan. இவர் Gwangju விவகாரத்தை மிகவும் கொடூரமாக ஒடுக்கியவர். 1987ல் நாடு தழுவிய மக்கள் போராட்டங்களால் பதவி துறந்தார்.

ஆனால் தமக்கு நெருக்கமான இராணுவ அதிகாரியான Roh Tae-woo என்பவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்தார். 1996 ல், சுன் மற்றும் ரோஹ் இருவரும் 1979 ஆட்சிக் கவிழ்ப்பில் தங்களின் நடவடிக்கைகளுக்காக தேசத்துரோக குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

சுனுக்கு முதலில் மரணதண்டனை விதிக்கப்பட்டது, ஆனால் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. ரோஹ் 22.5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது 17 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

இருப்பினும் இரண்டு வருடங்கள் மட்டுமே சிறைவாசம் அனுபவித்த பின்னர் 1998 ல் இருவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. தென் கொரியாவி சர்வாதிகாரியாக அறியப்பட்டவர் ஜனாதிபதி Park Chung-hee. தனது உளவுத்துறை தலைவரால் 1979 அக்டோபர் 26ம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

Park Chung-hee படுகொலை செய்யப்பட்டதை வாய்ப்பாக பயன்படுத்திய Chun Doo-hwan மற்றும் Roh Tae-woo ஆகிய இரு இராணுவ தளபதிகளும் 1979 டிசம்பர் மாதம் சதிச் செயலுக்கு திட்டமிட்டனர்.

இது தென் கொரிய அரசியலை மேலும் நெருக்கடிக்கு தள்ளியது. 1961ல் ஜனாதிபதி Yun Po-sun என்பவரது ஆட்சியை இராணுவ தளபதியான Chun Doo-hwan என்பவர் சதியால் கவிழ்த்தார். இருப்பினும் அரசாங்கத்தின் மொத்த கட்டுப்பாட்டையும் கைப்பற்றிய Chun Doo-hwan, ஜனாதிபதியாக Yun Po-sun தொடர அனுமதித்தார்.

தென் கொரியாவின் முதல் ஜனாதிபதியான சிங்மேன் ரீ, 1960 ல் மாணவர்களால் நடத்தப்பட்ட மாபெரும் எழுச்சியின் காரணமாக ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தேர்தல் மோசடியால் தனது பதவிக் காலத்தை நீட்டிக்க ரீ மேற்கொண்ட முயற்சி காரணமாக மாணவர்களின் எதிர்ப்புகளுக்கு இலக்கானார். பதவி நீக்கம் செய்யப்பட்ட அவர் ஹவாய் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

1965ல் அவர் இறக்கும் வரையில் ஹவாய் தீவில் வசித்து வந்தார். தற்போது ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கும் இதுபோன்ற ஒரு நெருக்கடி ஏற்படலாம் என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.






# இரண்டு தடவை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்குக

## உதுமாலெப்பை எம்.பி. வேண்டுகோள்

(அபு அலா)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரு தடவைகள் வெள்ள அனர்த்தத்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயக் காணிகளும், ஆயிரக்கணக்கான மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான விஷேட நஷ்ட ஈடு வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் 161,916 பேரும், 85000 ஹெக்டயர் விவசாயக் காணிகளும், 605 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நிந்தவூர், காரைதீவு, கல்முனை பிரதேசங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொத்துவில், திருக்கோவில் பிரதேச மீனவர்களின் இயந்திர வள்ளங்களும் வெள்ளத்தால் சேதமாக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மீனவர் சமூகத்திற்கு இதுவரை எவ்விதமான நிவாரணங்களும் வழங்கப்படாத நிலைமையே காணப்படுகின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலேயே இந்நிலைமை காணப்படுகின்றது. இதனை மீன்பிடி அமைச்சர் கவனத்திற்கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நஷ்ட ஈடுகளை வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய காணிகளுக்கு ஓர் ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தொகை விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. எனவே விவசாயிகளுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகரித்து வழங்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவை மாத்திரமல்ல, இம்முறை ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால்

அம்பாறை மாவட்டத்தில் 11 பேர் மரணமடைந்துள்ளனர். இச்சம்பவத்தால் எமது மாவட்ட மக்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

எனவே, இந்த விடயங்களை அரசாங்கம் கவனத்திற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகரித்து வழங்குவதுடன், மீனவர்களுக்கான அவசர உதவிகளையும் வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கேட்டுக்கொண்டுள்ளார்.

# சிறப்பாக இடம்பெற்ற வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும், வவுனியா மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திதிரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது, பல கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், ஆக்க இலக்கியத் துறைக்கான வவுனியம் விருது ஊடகவியலாளர்





சிவகுமார் திவியந்தினி அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், மேலும் 6 பேருக்கு பல்வேறு துறைகளில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தியமைக்காக வவுனியம் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. (100)






# பின்னடைவை சந்தித்தாலும் மக்களுடன்தான் இருக்கிறோம்

(கிஷாந்தன்)

தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை தேடிவரும் பருவகால பறவைகள் நாம் அல்ல! வென்றாலும், பின்னடைவை சந்தித்தாலும் மக்களுடன் தான் இருக்கின்றோம். மக்களுக்கான எமது பயணம் தொடரும்.- என்று அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.



அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் காரியாலயம் ஹற்றன் சக்தி மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அனுஷா மேலும் கூறியவை வருமாறு -

பொதுத்தேர்தலென்பது அநுர சுனாமி என்றே கூறவேண்டும். அந்த சுனாமியில் பிரதானக் கட்சிகளெல்லாம் அள்ளுண்டுசென்றன. பல வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் காணாமல் ஆக்கச்செய்யப்பட்டனர். அப்படி இருந்தும் நுவரெலியா மாவட்டத்தில் எனக்கு 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் அளிக்கப்பட்டன. சொற்ப அளவான வாக்குகள் வித்தியாசத்திலேயே நாடாளுமன்ற ஆசனம் கைநழுவிபோனது.

இதனை நான் தோல்வியாகக் கருதவில்லை. தற்காலிக பின்னடைவு மாத்திரமே. எனது தந்தைமீதுள்ள மதிப்பால் என்னையும் நம்பி வாக்களித்த மக்களுக்கு மிக்க நன்றிகள். என்னோடு தோளோடு தோளாக நின்று செயற்பட்ட தந்தையின் நண்பர்கள், தோழர்கள், செயற்பட்டாளர்கள், இளைஞர்கள், ஆதரவாளர்கள் என அனைவருக்கும் நன்றிகள்.

அதேபோல வதந்திகளை பரப்பி எமக்கான வாக்குகளை குறைப்பதற்கான சதிகளும் முன்னெடுக்கப்பட்டன. நிச்சயம் தற்போது உண்மை என்னவென்பது அவர்களுக்கு தெரியவந்திருக்கும். எனது தந்தை மக்களுக்காக மக்கள் அரசியலை முன்னெடுத்த தலைவர். சலுகைகளுக்காக மக்களை அடகு வைத்தது கிடையாது. எனவே, நாம் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை தேடிவரமாட்டோம். தேர்தல் முடிந்த பிறகு ஓடிவிடவும் மாட்டோம். வென்றாலும், பின்னடைவை சந்தித்தாலும் மக்களுக்காக அரசியல் செய்வோம். அது மக்கள் நல அரசியலாக இருக்கும். - என்றார்.



# சேமமடு கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் 5 பேர் கைது

வவுனியா, சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் நாவற்குளம் பகுதியை குடும்பஸ்தர் (வயது 46) உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஓமந்தைப் பொலிஸார் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் பயணித்த வாகனத்தின் சாரதியை அன்றைய தினமே கைது செய்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாரும், ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, உக்குளாங்குளம், கூமாங்குளம், வேலங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (100)

# நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் 8 தமிழக மீனவர்கள் கைது

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட 08 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், கடற்றொழிலாளர்களை கைது செய்துள்ளதுடன், அவர்களது இரு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வன்முறைக்குள்ளாகும் பெண்கள்; அறிக்கையிடலில் கவனம் தேவை

## பிரதமர் ஹரிணி கூறுகிறார்

வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் தொடர்பில் ஊடக அறிக்கையிடலில் கவனம் தேவையென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

பாலினஅடிப்படையிலானவன்முறைக்கு எதிரான 16 நாள் உலகளாவிய செயல்முனைவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைமையில் நாடாளுமன்றத்தில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



இந்நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற பெண் பணியாளர்கள் செம்மஞ்சள் நிற சேலை அணிந்திருந்தனர்.

முதலாவதாக 'பாலின அடிப்படையிலான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒன்றிணைவோம்' எனும் வாசகம் தங்கிய கைப்பட்டி குழுக்களில் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர உள்ளிட்ட நாடாளுமன்ற பெண்உறுப்பினர்களின்ஒன்றிய அங்கத்தவர்களால் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவுக்கு அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான கயந்த கருணாதிலக்க ஆகியோருக்கும் இந்த கைப்பட்டி அணிவிக்கப்பட்டது. இதன்போது நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் பங்கேற்றிருந்தார்.

அதனையடுத்து, 'பாலின அடிப்படையிலான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒன்றிணைவோம்' எனும் வாசகம் தாங்கிய கைப்பட்டி பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் வைத்திய கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி சபாநாயகர் கௌரவ வைத்திய கலாநிதி ரிஸ்வி சாலி ஆகியோருக்கும் அணிவிக்கப்பட்டது.

அத்துடன், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த கைப்பட்டி மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல் மற்றும் பாலின அடிப்படையிலான சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலான பொது உறுதிமொழி அடங்கிய பத்திரமும் இங்கு வழங்கப்பட்டது.

அதனையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய குறிப்பிடுகையில் -

வன்முறைக்கு உள்ளாகும் பெண்கள் தொடர்பான செய்திகள் சித்திரக்கதைகள் அல்ல, வாழ்க்கை தொடர்பான விடயங்கள் என்பதால் அவை தொடர்பான ஊடக அறிக்கையிடல்களில் கவனம் தேவை எனவும் தெரிவித்தார்.

பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பெரும்பாலும் அறியாதவர்களால் அல்ல என்றும் மிகவும் நெருக்கமானவர்களால் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் குறிப்பிடுகையில் -

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக 1938 எனும் இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

அவ்வாறான வன்முறைகள் தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்கள் மீதான கணினி ஊடாக மேற்கொள்ளும் குற்றங்கள் தொடர்பின் கடினமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்துக்கு நாடாளுமன்றத்தில் முன்னுதாரணமாக பணியாற்றுவது பொறுப்பானது எனவும், நாட்டில் சட்டம் இயற்றும் பொறுப்பு காணப்படும் இடமான நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் அபிமானம், கௌரவம் நாட்டின் அனைத்துப் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் அபிமானம் மற்றும் கௌரவத்தை தீர்மானிக்கும் பிரதான இடமாகும் என நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.



## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்காதது தவறு என்று தெரிவித்ததுடன் உடனடியாகத் தேர்தலை நடத்தும்படி உத்தரவிட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் மற்றும்பொதுத்தேர்தல்ஆகியவைஅடுத்தடுத்து இடம்பெற்றதனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை.

இந்தத் தேர்தலுக்காக ஏற்கனவே கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இல்லாமலாக்கிவிட்டுப் புதிய வேட்புமனுக் களைக் கோருவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதனால் இந்தத் தேர்தல் உடன் நடத்தப்படும் சாத்தியங்கள் இல்லை.

## உப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், உப்பை இறக்குமதி செய்வது குறித்து இதுவரையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லைஎனவர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## அரிசிக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்யப்படவுள்ள அரிசி சில நாட்களில் நாட்டை வந்தடையவுள்ளது. ஆலைஉரிமையாளர்களின்பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த விடயங்களை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதேநேரம், அடுத்த ஆண்டுக்குள் அரிசி இறக்குமதி செய்யும் நிலைமையை மாற்றுவோம். அதற்கானநடவடிக்கைளையும் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

## அத்தியாவசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான சரியான கொள்முதல் நடைமுறையை பின்பற்றாததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும்எனஅதன்செயலாளர்வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

வழமையாக புதிய வருடமொன்று ஆரம்பமாகும்போது, சுகாதார அமைச்சினால் குறித்த வருடத்துக்கான மருந்துகளுக்கான மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு கொள்வன வுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், கடந்த ஆளும்தரப்பின் பலவீனம் மற்றும் கடந்த காலங்களில் சுகாதாரத் துறையின் அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டமையினால் தற்போது, மருந்து ஒழுங்குபடுத்தல், கொள்வனவு மற்றும் விநியோகம் ஆகிய செயற்பாடுகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மருத்துவ விநியோகப் பிரிவின் தரவுகளுக்கமைய, அடுத்த ஆண்டில் பெருமளவில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படக்கூடியநிலைஅவதானிக்கப்பட்டுள்ளது.

இன்சுலின், புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் சில உயிர்காப்பு மருந்துகளுக்கும் இப்போதே தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, ஆளும்தரப்பு உரிய கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி பெரும் பற்றாக்குறைகள்ஏற்படுவதனைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள்சங்கங்களின்கூட்டமைப்பினது செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

# உணவுத் தரத்தைச் சோதிக்க சாவலை எதிர்கொள்கிறது நாடு

உணவின் தரத்தை பரிசோதிப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட எந்தவொரு பரிசோதணையையும்இலங்கையால் மேற்கொள்ள முடியவில்லை என பேராசிரியர் கமல் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, தலசீமியா மற்றும் சிறுநீரக நோயின் தாக்கம் இந்நாட்டிலும் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டில் கிளைபோசைட் பாவனை சம்பந்தமான தரவுகள் எவையும் இல்லை. ஆனால் இதனையொத்த பதினொரு மூலங்கள் பாதிப்பை ஏற்படுத்துபவையாக உள்ளன.

உலக சுகாதார சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் அந்த விடயம் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் அதுபற்றிய பரீசலனைகள் இதுவரையில் நடத்துப்படவில்லை.

அநுராதபுரத்தில் 15-17 வயதுக்கு இடைப்பட்ட 100 பாடசாலை மாணவர்களிடையே நடத்துப்பட்ட பரிசோதனையின் போது தலசீமியா 23.9சதவீதமாகவும் குருநாகலில் 20.6சதவீதமாகவும் காணப்பட்டதாக பேராசிரியர் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டின் சுகாதார கட்டமைப்பினுள் 300க்கும் அதிகமான மருந்துகளுக்கு முன்னர் பற்றாக்குறை நிலவிய போதிலும் தற்போது அது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டுஅவர்இதனைக்தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



### உறவுகள் சரணடைந்தபோது இருந்த

# படை அதிகாரிகளிடம் விசாரணையை தொடங்கி நம்பிக்கை ஏற்படுத்தட்டும்

### சுவிஸ் அமைச்சரிடம் வலியுறுத்து

ஆனந்தபுரம், வட்டுவாகல், தேவிபுரம், ஓமந்தை ஆகிய நான்கு இடங்களில் எமது உறவுகள் சரணடைந்தபோது கடமையில் இருந்த படை அதிகாரிகளை ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு முதற்கட்டமாக விசாரணைக்கு உட்படுத்தி நம்பிக்கைய ஏற்படுத்த வேண்டும் என்று வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சுவிட்சர்லாந்தின் இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லினிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ்சர்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான பெடரல்திணைக்களத்தின் சமாதானம், மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் இரண்டு நாட்கள் வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நேற்று முன்தினம் மாலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை கிளிநொச்சியில் சந்தித்து உரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் சுவிட்சர்லாந்தின் உதவி இராஜாங்கதுணைச்செயலாளருடன்இலங்கைக்கான சுவிட்சர்லாந்தின் தூதுவர் கலாநிதி சிறிவொல்ட், மனிதப்பாதுகாப்புக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் போலியட், தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கான சிரேஷ்ட அதிகாரி சுசந்தி கோபால கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி, செயலாளார் லீலா தேவி உட்பட எட்டு மாவட்டங்களின் தலைவிகள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, இராஜாங்க துணைச் செயலாளர் டிம் எண்டர்லின் புதிய ஆளும்தரப்பின் மீதான நம்பிக்கை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் உறவுகளின் நிலைப்பாடு தொடர்பில் கேள்விகளை தொடுத்திருந்தார்.

இச்சமயத்தில், போரின் பின்னரான 15 ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த எந்தவொரு ஆளும்தரப்பும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய கரிசனைகளைக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட்டுக் கொள்ளவும், சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்காகவுமே வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை ஆளும்தரப்பு ஸ்தாபித்தது. அதில் ஒரு சம்பவத்தினைக்கூட முறையாக விசாரணைக்கு உட்படுத்தவில்லை. வெறுமனே காணாலாக்கப்பட்டவர்களின் உறவிர்களுக்கு மாதந்த கொடுப்பனவுகளை வழங்கி இறப்புச் சான்றிதழை வழங்குவதற்கே அந்த அலுவலகம் முனைந்தது.

அதன் காரணத்தினாலேயே நாம் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை முற்றாக நிராகரித்தோம். தற்போதும் நிராகரிக்கின்றோம். ஆனால் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பும் நாம் நிராகரித்த அந்த அலுவலகத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதன் காரணமாக புதிய ஆளும்தரப்பின் மீதும் எமக்கு நம்பிக்கை இல்லாத நிலைமையே காணப்படுகிறது. எம்மைப் பொறுத்தவரையில், புதிய ஆளும்தரப்பு ஊழல் ஒழிப்பு, முறைமை மாற்றம் பற்றிய பல விடயங்கள் பற்றி வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அவற்றை அமுலாக்கவதற்கான நடவடிக்கைளை முன்னெடுக்கும் அதேநேரம், விசேடமாக, பாதிக்கப்பட்ட எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக, சிலவிடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

விசேடமாக, இறுதிப்போரின்போது எமது உறவுகள் வட்டுவாகல், ஆனந்தபுரம், தேவிபுரம், மற்றும் ஓமந்தை ஆகிய பகுதிகளில் சரணடைந்தார்கள். அவர்கள் தற்போது வரையில் எங்கே சென்றுள்ளார்கள் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அக்காலத்தில் இந்த நான்கு பகுதிகளிலும் கடமையாற்றிய படை அதிகாரிகள் தற்போதும் உள்ளார்கள். அதில் சிலர் உயர் பதவிகளிலும் உள்ளார்கள்.

நாம் ஆளும்தரப்பு மீது நம்பிக்கை வைப்பதாக இருந்தால் குறித்த அதிகாரிகளிடமிருந்து மீது பகிரங்கமான விசாரணையை ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறானவிசாரணையைமுன்னெடுப்பதன்ஊடாக ஆளும்தரப்பு எமக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு முனைகிறது என்ற நிலைப்பாட்டை எம்மால் கொள்ள முடியும்.

அந்த வகையில் ஆளும்தரப்பு ஆணைக்குழுக்களை அமைப்பதாலோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை செயற்படுத்துவதாலோ எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படப்போவதில்லை. அதேநேரம், சர்வதேச சமூகமும் எமக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேச பொறிமுறையொன்றை உருவாக்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றனர்.

## சதொச மூலம் விற்கும் தேங்காய்கள் எண்ணிக்கை 2 லட்சமாக அதிகரிப்பு

லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை நேற்று 200,000 ஆக அதிகரிக்கப்படும் என வர்த்தக, வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசுக்கு சொந்தமான தோட்டங்களில் இருந்து பெறப்படும் தேங்காய்கள், சன நெரிசல் அதிகமாக உள்ள குறிப்பாக கொழும்பு உட்பட நகர்ப்புறங்களை இலக்கு வைத்து சதொச விற்பனை நிலையங்களில் தலா 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

தேங்காய் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நாளாந்தம் சுமார் 100000 தேங்காய்களை விற்பனை செய்யப்பட்டது.

சந்தையில் நிலவும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு வெகு விரைவில் தீர்வு காணப்படும் என வர்த்தகம், வாணிபம் , உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளும்தரப்புக் குறிப்பிட்டுள்ளது.

## அரிசி தட்டுப்பாட்டை நீக்க உடனடி தீர்வு அவசியம்

### நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு வலியுறுத்து

அரிசியின் விலை அதிகரிப்பு 1953ஆம் ஆண்டு ஹர்த்தாலுக்கு பிரதான காரணியாக அமைந்தது. தற்போதைய அரிசி தட்டுப்பாட்டுக்கு ஆளும்தரப்பு உடன் தீர்வு காண வேண்டும் இல்லையேல் பெரும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை தொடர்பில் கவனம் செலுத்த ஜனாதிபதி விசேட திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய் ஆகிய அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் நியாயமற்ற வகையில் உயர்வடைந்துள்ளன. நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதத்தில் சந்தையில் தேங்காய்க்கான தட்டுப்பாடு தீவிரமடையும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த ஆளும்தரப்புகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

சந்தையில் அரிசியின் விலை நியாயமற்ற வகையில் உயர்வடைந்துள்ளது. அரிசிக்கான விலையை நிர்ணயித்து கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரிசி ஆலையாளர்களே அரிசி விலையை தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

அரிசியின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு ஆகியவற்றால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரிசி விலை அதிகரிப்பு 1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலுக்கு பிரதான காரணியாக அமைந்தது. எனவே தற்போதைய அரிசி தட்டுப்பாட்டுக்கு ஆளும்தரப்பு உடன் தீர்வு காணவேண்டும். இல்லையேல் பெரும் நெருக்கடிகள் சமூக கட்டமைப்பில் ஏற்படும்.

மொத்த சனத்தொகையில் பெருமளவிலானோர் நாட்கூலி பெறுபவர்கள். அத்தியாவசிய பொருட்களின் விலை நிலையற்ற வகையில் காணப்பட்டால் இவர்கள் எவ்வாறு வாழ்வார்கள்? ஆகவே அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி விசேட திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்றார்.

## மூன்று தமிழ் கட்சிகளுடன் சுவிஸ் அதிகாரிகள் சந்திப்பு

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சுவிஸ் அரசின் அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத்தீர்ப்பது தொடர்பில்தமிழர்தரப்பின்நிலைப்பாடு தொடர்பிலும், ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான புதிய அரசுடன் நடைபெறக்கூடிய பேச்சுகள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் சுவிஸ் வெளிநாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளரும், சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவருமான ரிம் எண்டர்லின், இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிரி வோல்ற், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மனிதப் பாதுகாப்புக்கான முதன்மைச் செயலாளர் ஜெஸ்ரின் பொய்லற், சுவிஸ் தூதரகத்தின் மூத்த தேசிய திட்ட அதிகாரி சுசந்தி கோபாலகிருஷ்ணன் உள்ளடங்கிய குழுவினர் பங்கேற்றனர்.

இதில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ப.சத்தியலிங்கம் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir







# கொழும்பில் செரிட்டி கடைத் தொகுதி சவூதி அரேபியத் தூதரகம் பங்கேற்பு

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சால் வெளிநாட்டுத்தூதரகங்களுக்கான சேவை நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செரிட்டி கடைத்தொகுதி ஆரம்பிக்கப்பட்டது.

இதில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதரகம் பங்கேற்றது.

அத்துடன் இதன்போது வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் பங்கேற்றார்.

சவூதி தூதரகத்தின் கடைத் தொகுதி சவூதி அரேபியாவுக்கே உரித்தான பல தயாரிப்புப் பொருள்களை கொண்டு அமைக்கப்பட்டிருந்ததோடு, இவை பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள நிவாரண வழங்கலில் இந்தியத் துணைத் தூதரகமும்

வடக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்திய துணைத் தூதரகத்தால் அத்தியாவசிய உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பேசாலை மற்றும் வெள்ளாங்குளம் (மன்னார்), துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு (முல்லைத்தீவு) ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 2,100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டன.

சனிக்கிழமை நடைபெற்ற நிவாரண உதவி வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.







# இலங்கைக்கு ஜப்பான் அரசு வெள்ள நிவாரண உதவி

இலங்கையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஜப்பானிய அரசாங்கம் அளித்துள்ள 300 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி, இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் மற்றும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமை நிறுவனம் ஆகியவை இணைந்து இலங்கை பிரதிநிதிகளிடம் சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிப் பொருள்களில் 230 கூடாரங்கள், 1,300 படுக்கை விரிப்புக்கள் மற்றும் 50 மீற்றர் நீளமுள்ள பிளாஸ்டிக் சீட்ஸ் 30 ரோல்கள் என்பன காணப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு இந்த உதவித்தொகை, அந்தந்த மாவட்ட செயலாளர்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை மைய அதிகாரிகள் ஊடாக உடனுக்குடன் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்தா, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய ஹேரத், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசமடா மற்றும் ஜெசிக்காவின் இலங்கை பிரதிநிதி டெட்சுயா யமடா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், ஜப்பானில் இருந்து விசேட சரக்கு விமானம் மூலம் இந்த உதவிப் பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை இலகுவாக தீர்க்கப்படவேண்டிய ஒன்றேயாகும்

## தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா கூறுகிறார்



(அஷ்ரப்கான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை இலகுவாக தீர்க்கப்பட வேண்டியது. ஆனால் பிச்சைக்காரனின் புண் போல் அரசியல்வாதிகள் அதனை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தேசிய காங்கிரஸின் தலைவர் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை அக்கரைப்பற்று கிழக்கு வாசலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தேசிய காங்கிரசினுடைய உயர் பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் அவர் இங்கு கூறியதாவது -

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை என்பது தமிழர்களும் முஸ்லிம்களும் இலகுவாக தீர்க்கக்கூடிய பிரச்சினையாகும். இதை

முஸ்லிம் காங்கிரஸ், டி.என்.ஏ. இன் அரசியல்வாதிகள் தேர்தல் வருகின்றபோது அதற்கு உயிரூட்டி புறக்கோடியா, புலி கொடியா, தமிழர்களுக்கு கணக்காளர் வேண்டும் என்று இரண்டு பக்கத்தாலும் இந்த விடயத்தை சூடாக்கி விடுவார்கள். பின்னர் தேர்தல் முடிந்த பிறகு அமர்ந்து விடும் இந்த விடயம். இப்பொழுதும் நாடாளுமன்றத்திற்கு சென்றவர்கள் ஏதாவது கதைக்க வேண்டுமே. அதுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். பிஸ்மில் சொல்லும்போது நல்ல விடயம் ஒன்றில் தொடங்குவது தானே. ஆனால், எடுத்த எடுப்பிலேயே போய் கூர்ப்படுத்தி கத்தி தீட்டுகின்ற வேலையை தான் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை நாங்கள் பேசித் தீர்ப்போம் என்று சொல்வதற்கு யாரும் இல்லை. ஆனால் நாங்கள் இருக்கிறோம். நாங்கள் அதைத்தான் யோசிக்கிறோம். எங்களால் இந்த பிரச்சினையை பேசித் தீர்க்கமுடியும்.

ஆகவே, இந்த விடயம் அவர்களுக்கு தேர்தலுக்குரிய வியூகம்.

கல்முனையில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோத வைத்துவிட்டு அவர்கள் அதில் குளிர் காய்வது அவர்களது வியூகம். இந்த பிரச்சினையை முடிப்பதென்றால் எப்பொழுதோ அது முடிந்திருக்க வேண்டும்.

கல்முனை தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ கத்தியை வைத்துக்கொண்டு வாழ்வதற்கு விரும்பவில்லை. அது சாதாரணமாக ஓர் எல்லை சம்பந்தமான விடயம் மாத்திரமே. இதனை இலகுவாக தீர்க்க முடியும். தீர்ப்பதற்கு அந்த பிராந்தியத்தின் உடைய அரசியல்வாதிகளும் அதற்கு பொறுப்பாக இருக்கின்ற அரசியல்வாதிகளும் இணங்க வேண்டும். மாறாக இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை. பிச்சைக்காரனின் புண் போல் அது அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# காத்தான்குடி வீதியில் திடீரென தீப் பற்றி எரிந்த ஓட்டோ நாசம்

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் காத்தான்குடி வீதியால் சென்றுகொண்டிருந்த ஓட்டோ திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

ஓட்டோவில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோ பயணித்த யாருக்கும் எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை.

பிரதேசவாசிகளின் துரித முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# மாவடிப்பள்ளி வெள்ளத்தில் அள்ளுண்ட மாணவர் குடும்பங்களுக்கு ரூ. 1 லட்சம்

(ஸாகிர்)

இலங்கை வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியத்திலிருந்து தலா ஒரு லட்சம் ரூபா வீதம் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திய மாவடிப்பள்ளி விபத்தில் மரணமடைந்த மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப் பெரும் வெள்ள அனர்த்தத்தின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.

குறிப்பாக, மாவடிப்பள்ளி விபத்தில் உயிர் இழந்த மத்ரஸா மாணவர்களின் மரணமானது, முழு நாட்டு மக்களையுமே மீளாத்துயரில் ஆழ்த்தியது.

இவ்வாறான இள வயது மரணங்கள் என்பது பெற்றோர்களையும் உறவினர்களையும் மிகவும் கவலைக்குட்படுத்தக் கூடிய விடயமாக மாறியுள்ளதனால் அவர்களுக்கு இந்த இழப்பின் வலியை தாங்குகின்ற மன தைரியத்தை இறைவன் கொடுக்க வேண்டும் என்றும், உயிரிழந்த அனைவருக்கும் ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனம் கிடைக்க வேண்டுமென்றும் அதற்காக பிரார்த்தனை செய்யுமாறும் திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது.

அத்தோடு, இவ்விபத்தில் பாதிக்கப்பட்டு மரணமடைந்த 6 மத்ரஸா மாணவர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ஏஎஸ்எம்.நவாஸ் அவர்களது பரிந்துரையில் இலங்கை வக்ப் சபையும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து முஸ்லிம் தர்ம நிதியிலிருந்து ஆறு லட்சம் ரூபாவை தலா ஒரு லட்சம் வீதம் மரணமடைந்த மத்ரஸா மாணவர்களின் பெற்றோர்களிடம் காசோலைகளாக ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினூடாக வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஐ. பிர்னாஸ், சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள கணக்காளர் எ.எல்.எம். நிப்றாஸ் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள கொழும்பு மாவட்டத்துக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். மஸீன் உட்பட சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நான்கு வலம்புரி சங்குகளை விற்க முயன்ற இருவர் கைது

மாதம்பே மற்றும் வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வேறு பிரதேசங்களில் 4 வலம்புரி சங்குகளை விற்க முயன்ற சந்தேக நபர்கள் இருவர் நேற்று சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புத்தளம் முகாமின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட இரு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாதம்பே மற்றும் வெண்னப்புவ பிரதேசங்களைச் சேர்ந்த 41 மற்றும் 42 வயதுடையவர்கள் ஆவர்.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2024இல் வெளியிடப்பெற்றது